FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364156

1. District : மாவட்டம் Namakkal PS: காவல்நிலையம் VAC Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 08/AC/2026 Date: நாள் 10.08.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 07.08.2026 at about 1130hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 08.08.2026 at about 1730 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.08.2026 Time : நேரம் 1900hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-III Time : நேரம் 20.30 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 30 kms west
   Beat Number : முறைக் காவல் எண் —— (b) Address : முகவரி Nallur Police Station, Namakkal Dt.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —— District : ——
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Soumiyaraj (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. Muthuraj
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age - 32 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி Door No. 3/116, Salapalayam, Nadanthai Post Paramathi Velur T.K, Namakkal Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Gangadharan, Sub Inspector of Police, Nallur Police Station, Namakkal Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   Delay by the Informant

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted.

Separate sheets Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction. —

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகெரள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக், கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலைய்த்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Sa 10/8/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

10/08/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 11.08.2026 at 0700hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S.PRABHU
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police, V&AC, Namakkal.

நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். **08/AC/2026, u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018**-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி....

இன்று 10.08.2026-ஆம் தேதி திங்கட்கிழமை இரவு 19.00 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் ஆஜரில் இருந்த போது, வழக்கின் புகார்தாரர் திரு.**M**.சௌமியராஜ் **S/o**.முத்துராஜ், கதவு எண்.3/116 சாலப்பாளையம், நடந்தை போஸ்ட், பரமத்தி வேலூர் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் **M**.சௌமியராஜ், **s/o**. முத்துராஜ், கதவு எண்.3/116 சாலப்பாளையம், நடந்தை போஸ்ட், பரமத்தி வேலூர் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு, நாமக்கல் மாவட்டம். அய்யா, நான் நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் தாலுக்கா, நடந்தை சாலப்பாளையம் கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருக்கிறேன். நான் **B.E** வரை படித்துவிட்டு, தற்போது விவசாயம் செய்து வருகிறேன். எனது அப்பாவுக்கு 2019-ம் வருடம் விபத்தில் அடிபட்டு உடம்பு சரியில்லாமல் உள்ளார். நடந்தை கிராம சர்வே எண்.72-ல் திருச்செங்கோடு **To** பரமத்தி ரோட்டில் வசந்தபுரம் பஸ் ஸ்டாப் அருகில் எனக்கு சொந்தமாக சுமார் 3½ சென்ட் நிலமும் அதில் ஒரு வீடும், கடையும் உள்ளது. அதற்கு வடபுறம் உள்ள சுமார் 1¾ சென்ட் காலியிடத்தை எங்கள் ஊரைச்சேர்ந்த சென்னப்பநாய்க்கர் மகன் முத்துசாமி வாங்கியுள்ளார். 2026 பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் அந்த நிலத்தைச்சுற்றி கல் நட்டு கம்பி வேலி போட்டார், அப்போது எனது நிலத்தில் இருந்த சிமெண்ட் தூரையை சுமார் அரை அடி உடைத்து அந்த வேலி போட்டிருந்தார். அதனால் நான் சர்வேயரை கூட்டி வந்து இரண்டு நிலத்தையும் அளந்து பார்த்த போது, எனது நிலம் அளவு சரியாக இருந்தது. அதனால் நான் முத்துசாமியை கூப்பிட்டு, அந்த கம்பி வேலியை வடக்கே தள்ளி அவருடைய இடத்தில் போடச் சொன்னேன். ஆனால் சுமார் பத்து நாளுக்கு மேலாகியும் அவர் நான் சொன்னபடி செய்யவில்லை. எனவே அந்த கம்பி வேலியை நானே எடுத்துவிடலாம் என்று முடிவு செய்து, முட்டு கல்லை பிடுங்கியும், கம்பி வேலியை சுருட்டியும் அவருடைய காலியிடத்தில் வைத்துவிட்டேன். கொஞ்சநாள் கழித்து 2026 மார்ச் மாதத்தில் ஒரு நாள் நல்லூர் போலீஸ் ஸ்டேசனிலிருந்து **SI** கங்காதரன் என்பவர் எனக்கு போன் செய்து, எங்கள் ஊரைச்சேர்ந்த முத்துசாமி என்பவர் நிலப்பிரச்சனை தொடர்பாக என் மீது புகார் கொடுத்திருப்பதாகவும், அது சம்பந்தமாக விசாரணைக்கு நேரில் வரும்படியும் சொன்னார்.

அதனால் நானும் நல்லூர் போலீஸ் ஸ்டேசனுக்கு நேரில் போனபோது, SI கங்காதரன் என்பவர் என்னை விசாரித்தார். நானும் நடந்தவற்றை விளக்கமாக சொன்னேன், பின்பு அவர் என்னை அனுப்பிவிட்டார். அதன் பிறகு போன வாரம் 06.08.2026-ம் தேதி வியாழக்கிழமை மதியம் சுமார் 12.40 மணிக்கு நல்லூர் போலீஸ் ஸ்டேசன் SI கங்காதரன் 6380673283 என்ற அவருடைய செல்போன் நெம்பரிலிருந்து, 9095443724 என்ற எனது செல்போன் நெம்பருக்கு போன் செய்து, எங்கள் ஊரைச்சேர்ந்த முத்துசாமி என்பவருக்கும், எங்களுக்கும் இடையேயான நிலப்பிரச்சனை தொடர்பாக என் மீது கொடுத்த புகார் சம்பந்தமாக விசாரணைக்கு நேரில் வரச்சொன்னார். அதனால் நான் 07.08.2026-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை சுமார் 11.30 மணியளவில் நல்லூர் போலீஸ் ஸ்டேசனுக்கு நேரில் போய் SI கங்காதரனை பார்த்தபோது, அவர் உன் மேல் உள்ள புகாரை இங்கேயே முடித்துக் கொள்கிறாயா இல்லை கோர்ட்டுக்கு அனுப்பிவிடட்டுமா என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான், என்மேல எந்த தப்பும் இல்லைங்க சார், அதனால இங்கேயே முடித்து விட்டுருங்க சார் என்று சொன்னேன். அப்படின்னா பணம் செலவாகும் என்று சொன்னார். எவ்வளவு சார் ஆகும் என்று கேட்டேன். ஒரு ஐம்பதாயிரம் ஆகும் என்று சொன்னார். அதற்கு நான் வீட்டில் பேசிவிட்டு சொல்வதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகு மறுநாள் சனிக்கிழமை மதியம் சுமார் 12.00 மணியளவில் நல்லூர் போலீஸ் ஸ்டேசனுக்கு நேரில் போய் மீண்டும் SI கங்காதரனை பார்த்து பேசியபோது, அவர் பணம் ரெடி பண்ணிட்டியா என்று என்னிடம் கேட்டதற்கு, நான் அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியாது சார் என்று சொன்னேன். உடனே அவர் கோபமாக எழுந்து வந்து என்னிடம் நீ கோர்ட்டில் போய் பாத்துக்க போ என்று சத்தம் போட்டு என்னை அனுப்பிவிட்டார். எனவே நான் பயந்து போய் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் அன்று மாலை சுமார் 05.00 மணிக்கு SI-க்கு போன் பண்ணி பேசிய போது, அவர் என்னிடம் நேரில் ஸ்டேசனுக்கு வா என்று சொன்னார். அதனால் நான் வீட்டிலிருந்து கிளம்பி நல்லூர் போலீஸ் ஸ்டேசனுக்கு சுமார் 05.15 மணிக்கு வந்தேன். அப்போது அவர் ஸ்டேசனில் இல்லாததால் கொஞ்ச நேரம் வெளியே நின்று கொண்டிருந்தேன். அப்போது SI கங்காதரன் ஸ்டேசனுக்கு தென்புறம் இருந்து போலீஸ் குவார்ட்டர்ஸில் இருந்து வெளியே வந்தார். எனவே அவர் அருகே சென்று பேசியபோது, கேஸ் போட்டாச்சுடா, நீ கோர்ட்டுக்கு போனால் அலையனும், செலவும் அதிகமாகும் என்றும் இங்கேயே முடிச்சுக்கலாம் என்றும் என்னிடம் சொன்னார். எவ்வளவு சார் கொடுக்கனும் என்று நான் கேட்டபோது ஒரு நாற்பதாயிரம் ஆகும் கொடுத்துவிடு என்றார். அதனால் நான் இப்போது தான் தோட்டத்தில் நிறைய செலவு ஆகிட்டது சார் கொஞ்சம் கொறைச்சுக்கோங்க என்று கேட்டேன். அதற்கு அவர் அப்படின்னா முப்பதாயிரம் கொடுத்திடு என்றும் அதற்கு கீழே குறைக்க முடியாது எனவும், அப்படி கொடுக்கலைனா நீ கோர்ட்டுக்கே போய்

பார்த்துக்கோ என்றும் கறாராக சொல்லிவிட்டார். அதற்கு நான் சரிங்க சார் பணம் ரெடி பண்ண ஒரு வாரம் ஆகும் ரெடி பண்ணிட்டு வந்து உங்களை பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என் மீது கொடுக்கப்பட்ட புகார் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட **SI** கங்காதரன் என்பவருக்கு லஞ்சமாக ரூ.30,000/- பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இதனால் நான் நாமக்கல் லஞ்ச ஒழிப்புத்துறையில் இதுபற்றி புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்தேன். நல்லூர் போலீஸ் ஸ்டேசன் **SI** திரு.கங்காதரன் என்பவர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.30,000/-த்துடன் நல்லூர் போலீஸ் ஸ்டேசன் சென்று நேரில் பார்க்க தயாராக உள்ளேன். எனவே, அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம்(XXXXX) 10.8.26. (M. சௌமியராஜ்)

Sir,

I received the above computer typed complaint on 10.08.2026 at 19.00 hrs and the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity of the accused was also verified through sources and which is learnt to be not good. The motive and antecedents of the complainant with the accused have been checked carefully and found nothing adverse. Hence, I obtained oral concurrence from the DVAC, Chennai and I registered a case in Namakkal Vigilance and Anti-Corruption Crime No.08/AC/2026, u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 10.08.2026 at 20.30 hrs against the accused Tr.Gangadharan, Sub Inspector of Police, Nallur Police Station, Namakkal Dt. Sd/-(xxxx) (S.Prabhu) 10/08/26. Inspector of Police, V&AC., Namakkal.

The original FIR along with original computer typed complaint of the informant Tr.M.Sowmiyaraj are submitted to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Namakkal and remaining copies are sent to the officers concerned and I took up investigation.

10/08/26

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
NAMAKKAL DISTRICT.